**கிறிஸ்தவ வணக்கஸ்தலங்கள் மற்றும் ஹோட்டல்கள் மீதான தாக்குதல்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடுமையாக கண்டிக்கின்றது.**

***21 ஏப்ரல் 2019, கொழும்பு, இலங்கை:*** *இலங்கையில் 200இற்கும்அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்கு 450பேர் காயமடைவதற்கும் காரணமான மூன்று கிறிஸ்தவ வணக்கஸ்தலங்கள் மற்றம் ஹோட்டல்கள் மீது இடம்பெற்ற தாக்குதல்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடுமையாக கண்டிக்கின்றது. யுத்தத்திற்குப் பிந்திய இலங்கை சந்தித்த பாரிய தாக்குதலாக இந்த அதிர்ச்சி தரும் அர்த்தமற்ற தாக்குதல் காணப்படுகின்றது.*

*இந்தத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர்களிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்வதுடன் இவ்வாறான வன்முறைகள் பரவுவதை தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றது. அதேவேளை, இந்த தாக்குதல்களுக்குக் காரணமானவர்களை எந்த தயக்கமோ பாரபட்சமோ இன்றி நீதியின் முன் நிறுத்துவதற்கான உடனடிநடவடிக்கைகளை எடுக்குமாறும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றது.*

*மத வணக்கஸ்தலங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவது குறித்தும் மத சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் குறித்தும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தொடர்சியாக சுட்டிக்காட்டி வந்துள்ளது. இவ்வாறானதொரு போக்கு சமீபகாலங்களில் அதிகரித்துள்ளது.*

*கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் இவ்வாறானதொரு சம்பவம் இறுதியாக இடம்பெற்றது. ஏப்ரல் 14ஆம் திகதி அனுராதபுரத்தில் உள்ள குன்டிச்சான்குளம் என்ற பகுதியில் உள்ள மெதடிஸ்ட் தேவாலயத்தில் இவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெற்றது. இன்றைய தாக்குதலின் பின்னரும் இவ்வாறான தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் போக்கு தொடர்வதற்கு அனுமதிக்கவேண்டாம் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது. இலங்கையின் மத சிறுபான்மையினரின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யவேண்டியதன் அவசியத்தையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகின்றது.*

ஹோட்டல்களில் இடம்பெற்ற தாக்குதல்களானவை பயங்கரமானவை என்பதுடன் சுற்றுலாத்துறையையும் குறிப்பாக பொருளாதாரத்தையும் இலக்குவைத்தவையாகக் காணப்படுகின்றன. மேலும் இது மக்களுக்குப் பாதுகாப்பளிக்கக் கூடிய அரசாங்கத்தின் திறனை கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் தனது திறனை வெளிப்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம். மேலும், எங்கள் சக பிரஜைகள் அரசாங்கத்திற்கு இதில் உதவவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்றைய சம்பவங்கள் நல்லிணக்கம், சீர்திருத்தங்கள் குறித்த வாய்ப்பேச்சுகளில் இருந்து உண்மையான செயற்பாடுகளை நோக்கி முன்னேறவேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளன. மதரீதியிலான பிரிவினைகள் அச்சம் மற்றும் வெறுப்பை தூண்டும் நடவடிக்கைகளை நாங்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். தேர்தல் வருடமான இந்த வருடத்தில் எங்களது அரசியல் மதத் தலைவர்களிடமிருந்து இதற்கு குறைவாக நாங்கள் எதனையும் கோரகூடாது.